1258

வ

விநாயக



இராஜப

சிங்கத்திருளப்ப

# * காதல்ப் பி

இஃது

இராஜபாளையம் லக்ஷிமிநாராயணராஜா அ

குமாரர்

## அனந்தராஜா அவர்கள்

இயற்றியதை

இராஜபாளையம் சிங்கராஜாக்கோட்டையிலிருக்கும்

கெருட கொண்டுராஜா அவர்கள் குமாரர்

**தர்மகர்த்தா பெருமாள்ராஜா**

அவர்களால்

இராஜபாளையம் ஜெயராம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1926

அணா 4

Q2:417
N26
176452

உ

ஸ்ரீராமஜெயம்.



## வினாயகர் துதி.

1. அத்திமா முகத் தைந்து காத்தோனே
ஒத்தைக் கொம்பை அணிந்து உகந்தவா
நித்தியானந்த நிர்மல ரூபனே
சித்தம் வைத்தெனை ஆண்டருள் செல்வனே.

2. செல்வ முற்றிடும் சித்தி விநாயகா
கல்வி தந்தருள் காருண்ய கற்பகா
தொல்லுலகம் துதித்திடத் தோன்றிடும்
அல்லல் தீர்த்தெனை யாண்டருள் அய்யனே.

3. அய்யம் தீர்த்து அடியாரைக் கார்த்திடும்
மெய்யனே யெனை யாண்டிடும் மேலவா
செய்ய தாமரைப் பாதம் சிறந்துளா
வையகம் துதி வல்லபை லோலனே.

4. மூல காரண நாத முதல்வனே
காலனை உதைத் தோட்ட றன்பாலனே
மால்தனக்கு மருகோனாய் வந்தவா
சீலனே யென் பெருமையைத் தீர்ப்பாயே

5. ஈசனே ஜெகத் காரணா ஆரணா
பாசம் வைத்தருள் பூர ணாதாரணா
வாசமா மலர் கொன்றை யணிந்தவா
தாசனைக் கார்த் தருள்வதுன் தஞ்சமே.

மாத மும்மாரி பொழி மாயழக நகரில் வாழ் மா சிங்கத்திருவேங்திரன்
மகிமைபெரு காதல் ப்ரபந்தம் உரைத்திட மாயாகு வாகனத்தா
சீதரா னந்த கோவிந்தன் முகுந்தற்கு செல்வனென வந்த மருகா
சிந்துர முகத்தோர் மருப்பெழில் ஜெயாகரா திரு வல்லபை மணாளா

பாதிமதி சடையிலணி பரமசிவ புத்ரனே பக்த ரக்ஷக தேவனே
பால குகனுக்கு முன்னோனாக வந்திடும் பரம கிருபை கண னாதனே
ஆதியே நீதியே ஜோதியே சத்தியே அண்டர் புகழ் கொண்ட பொருளே
அடியே னனந்த ராஜன் கவிக்கருள் மொழி அன்பு மிகத் தந்தருள்வையே.

## சாற்றுக்கவி.

உலகமதி லேயிருந் தோங்கி வளர் பூகமடல் உடைகின்ற விசையின்மச்சம்
உன்னிதப்புனல் காறு வழி சென்று மேகமிசை ஊடுருவி தாவி நின்று
இலகு காமத்தேனு கன்றெனக் கும்மியே இனிய பால் சொரிய விளையும்
இன்பமுறு அழகநகர் தன்னிலே வாழ்கின்ற இசை சிங்கத்திருளேந்திரன்.
பலம் பெருகு காதல் ப்ரபந்தம் பயிற்றினன் பண்பு பெறனந்த ராஜன்
பால்கண்டு சாக்கரைத் தேறலும் சீனிப் பழத்தொடு கலந்த மொழியை
சலசலோசனி கர்னபூஷணம தாகவே சார்ந்துமிக வெட்கமுற்று
சதுர்முகன் நாவினில் குடிகொண்டிருந்தாள் சதாகாலம் வாழியென்றே.

176452

## காதல்ப்ரபந்தம்.

உலகத்தோ ரேற்றும் உத்தம சிங்கத்திருளன்
இலகு காதல் பரபந்தம் யின்பமுடன் யானுரைக்க.

தும்பி முகத்தோர் மருப்புத் தூயாகு வாகனத்தாய்
தும்பி முகரின்ப மலர்த் துடையணியும் கர்ப்பகமே.

சொற்குற்றம் வாராமல் சுந்தரனே சந்ததமும்
நற் பதங்கள் என்னாவில் நவிலுவா யைங்கரனே.

அழக நகர் தன்னில் அரசாளும் ஆனந்த
அழகு சிங்கத் திருளேந்திரன் அன்பன்மேல் யான்பாட.

அயன் வாணி யம்பாள் அகில பரஞ்சோதி கவி
அயனவாள் காட்டும் அன்போறு காசனியே.

அல்லிமலர் பூத்து அரவிந்தம் தான் வளரும்
கல்லூரணித் தெப்பம் கதிர் தெற்குப் பக்கமதில்.

செந்நெல் விளைந்து செந்தாமரை பூத்து
கன்னல் வளரும் நீர்க்கால் பிரியாதிகுளம்.

கம்மாயின் பாகம் கருவி ரஸ்தாவின் கிழக்கு
பெம்மானாய் வந்துதித்தப் பிரபல சிங்க பூபாலன்.

காதல்ப் பிரபந்தம் கருத்துடனே யான்பாட
ஆதிசிவ புத்திரனே ஆறுமுகா நற்பதங்கள்.

தந்தருள்வாய் சுந்தரனே தாரபதிகள் தான் மகிழ
கந்தனெனப் பேர் தரித்த கார்த்திகேயா இவ்வேளை.

சிங்கத்திருளாண்டி செல்வத்துரை கோவில்
மங்களத்தைத் தானுரைக்க மானிடரால் செல்லாதே.

ஆதி சேடனாலே அறைந்தா லொருக்காலே
நீதியெனச் செப்ப நிலைபொருந்து மக்கோவில்.

கோட்டை மதில் சூழும் குடோரவாசல்ப் பெருமை
நாட்டமுடன் கண்டு நாவால் சொல்லொண்ணாதே.

மந்தாரப் பிச்சி மலர்ந்த இருவாக்ஷி
நந்தியாவட்டம் நாள் மலரும் நந்தவனம்.

கங்கை வளர் கூபமதில் கெச்சிதமாய் நீரருந்தி
சங்கடங்கள் தீர்க்கும் சரசுபதி மா தீர்த்தம்.

இப்படி வளம் பெருகும் இயல்பான கோவிலிலே
செப்புதற் கரிதான சிந்தர யெழில் வதனன்.

ஆதிசிவப் பார்வதியின் அருமைக் குழந்தையென
சோதியாய் வந்துதித்த சுந்தர விநாயகனை.

துதித்துப் பணிந்தோரைத் தொடரும் பிணிகள் தமைச்
சிதைத்து ஜெயம் கொடுக்கும் செல்வ விநாயகனும்.

கொத்தளத்து வீரன் கொடுங்கோல் செய் வீரபத்திரன்
சத்துருவை ஜெயிக்கும் சாமிகருப்பண்ணனும்.

பேச்சிராக்கு சத்திபெருமாலே ஆவுடையும்
ஆச்சிபெற்ற தேவதைகளான யிருபத்தொன்றும்.
கூட்டமா வயிரவரும் கூடியேதான் வாழும்
தாட்டிக சிங்கத்திருளச் சுவாமியைப்பணிந்தோர்க்கு
வாட்டமில்லாச்செல்வம் வளர்ந்து புத்திரபாக்கியமுடன்
நாட்டிலேதான்புகழ நலமாக வாழ்பவரே.

**தசாங்கம்.**

மதுவளந்த வேடுவர்க்கு மமர ரமுதளக்க
மதியளாவி நிற்கு மாசஞ்சீவி மால்வரையான்
மங்கையர்க ளிங்கிதமாய் செங்கைவளை ணங்குதல்போல்
மங்களங்கள் பாடிவரு மாசஞ்சீவி மாநதியான்
போரினில் கடந்த ரணவீர வஞ்சனாக் கறத்தால்
மாரியளைந்துவரு மாபிலத்துக் குஞ்சரத்தான்
தத்து பைத்தலிகல் ஜெயித்த தத்துவத்துக் கொபுயத்தில்
தத்திநின்று தானடம்செய் சந்தவெண்மை கந்துகத்தான்
துட்டர்களை முட்டி விழத்தட்டியே தூவாயால்
எட்டிக் கடித்துதரும் இகல் பெருகும் ஒட்டகத்தான்.
அரிய ரிருவர்களும் அயன் வேதம் நாலாறும்
அரி ஐந்துரெண்டும் பொய்ற்றாலும் அன்புமொழி பொய்யாதான்.
அஞ்சினவர் வாக்கிலிருந் தம்புபோ லோடி வம்பர்
அஞ்சினத்தை யாளும் ஆண்மையுற்ற ஆணையினன்.
மல்லிகை பிச்சி மலர்ந்த இருவாச்சி
முல்லை மலரோடு முடித்த தொடைமார்பன்.
தாள நகை மாதர் பலர் சாமரைகளா லிரட்ட
விரி கதிரெரிகதும் வொளி வீசும்நிகர் வெண்குடையான்.
அண்டர் தருவுக்கும் அறுங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும் கொடை கொடுக்கும்செங்கரத்தான்

மாத மும்மாரி மகிழ்வுடனே தான் பொழியும்
நீதி தவராத நிலைபெருகும் நாட்டுடையான்.

செந்நெல் விளைந்து திருக்குளங்கள் தாணிறைந்து
கன்னல் வளரும் கனம் பெருகும் நாட்டுடையான்.

ஓரேருடையான் உற்ற விரைகளெலாம்
தாராளமாகத் தாணியிலே தான் விதைத்து.

கார்வான முத்து கண்டு களிப்பதுபோல்
பார்மீதில் பாவலரைப் பார்க்குகின்ற நாட்டுடையான்.

சங்கீத சாகித்ய நாட்டியப் பிரசங்கமுடன்
இங்கிதப் பஞ்சக்கருவி யியல்பாடும் வாசலினன்.

சங்கீதத் தோடி சரசாங்கி சாரங்கம்
இங்கித ஸ்ரீராகம் இன்ப முகாரி முலாம்.

கும்ப காம்போதி குறிஞ்சியுடன் பீபாசு
தும்புருடர் போல் பாடும் தூபாசு பூபாளம்.

மங்கள கவுசிக ராகம் மாஞ்சியுடன் கேதாரம்
பங்காள கீர்வாணி பந்துவராளி யுடன்.

கேதார கவுளம் கிளர் கேதாரமுடன்
சீதளா கரா குறிஞ்சி செஞ்ரோதய ராகம்.

மோகன சங்கராபரணம் முதலான பைரவியும்
ஆகிரி யடாணவும் ஆனந்த பைரவியும்.

காம்போதி கானடாவும் காபி இந்துஸ்தானியுடன்
மாம்பூ கோகிலவாணி மகிழுபிர் கல்யாணி.

தீர சங்கராபரணம் திகழ் சக்கர வாகமுடன்
பேரனந்த தேசிகமும் பிலகரி ராகமுமே.

மத்தியாவதியும் மலகரியும் கன்னடமும்
சுத்த சாவேரி யொடு சுருட்டியுடன் தன்யாசி.

அமுர்த சரஸ்வதியும் அம்சத் தொனியுடனே
யமுனை கல்யாணி யெதுகுல காம்போதியுமே.

நாதநாமக் கிரிகை நாட்டையுடன் செஞ்சுருடி
காதல் சிந்து பைரவியும் கரகரப்ரியையுடன்.

நீலாம்புரி பைரவியும் நிறைந்த திரு பியாகடையும்
நீலாம்புரியும் நீநிலத்தோர் கொண்டாட.

சம்முகப் பிரிய சார்ந்த சுத்த தோடியுடன்
செம்மை முடுகோடு தேர்ந்த மனோரஞ்சிதமும்.

பூரி கல்யாணியுடன் புன்னக வராளி
ஆரபிய சாவேரி அம்பியாக் குவராளி.

நாகவ ராளியுடன் நன் கமாசு சகானா
மோகன அபோகியுமே முறைபாடும் வாசலினன்.

அங்க வங்கதேசம் அச்சி கல்யாணி
சிங்கள நேபாளம் சிந்து சௌராஷ்டம்.

வங்கள புளிந்தம் மகராஷ்ட ஈளம்
கொங்கு மலையாளம் கொச்சி குருதேசம்.

பல்லவம் பாண்டி பாங்கான பற்பாவம்
கொல்லம் சௌகோளம் கோசல மராளம்.

இந்த அரசரெலாம் இயல்பாகவே கூடி
வந்து துதிக்கும் வல்லபத்து வாசலினன்.

பணிந்து துதித்தோர்க்குப் பால் பாக்கிய சந்ததியும்
துணிந்து கொடுத்தருளும் துரை சிங்க பூபாலன்.

முத்து ரத்தின மிளைத்த முதல் சிங்கா சனத்திருந்து
சித்திபெற்ற சிங்கத்திருளேந்திர செல்வனுமே.

வைரவனைக்கூவி வாவென் றழைத்து மெள்ள
தைரியத்துடன் வேட்டை தான்செய்ய வேணுமென்று.

நல்ல துத்தரவு நாம் வேட்டை யாடுதற்கு
சொல்லுகிறேன் வீரரிடம் துணையா யழைத்துவாரேன்.

யென்று மொழிந்து இகல் பொருந்தும் வீரர்களை
அன்று அழைத்து அரசரிடம் தானமர்ந்தான்.

சிங்கத் திருளாண்டி செல்வத் துரை தனக்கு
சிங்காரம் செய்தார்கள் ஜெயம்பெருக அப்போது.

சம்பங்கி ஸ்தானம் தன்னியர்க்கு நீருட்டி
சம்பர பீதாம்பரத்தை தானுடுத்தி வைத்தார்கள்

சந்தணம் கஸ்தூரி சவ்வாதுடன் புனுகு
கந்த களபம் கமளு மட்டிப் பாலுடனே

நெறியரிசி பாலுடனே நிறைந்த அத்தர் ஜீஜாங்கி
திருவருளும் மேனியின்மேல் தீட்டினார் தேவனுக்கே

கந்தமலர்க்குழலில் கனமாகவே சூடி
விந்தை திருநீறு வேந்தனுக்கே தானுமிட்டு

வஸ்திரா பரணமதை வகைவகையாய்த் தானுமிட்டு
விஸ்தாரமாக விக்கிரம பராக்கிரனுக்கே

கையில் கடகமிட்டு காதில் கடுக்கனிட்டு
மெய்யி லணியும்வகை மேல்வர்க்குத் தானுமிட்டு

கழுத்தில் சரப்பழியும் காலில்வீர சங்கிலியும்
தழிர்த்தசிங்க பூபால சுவாமியுமே தானணிந்து

விஞ்சை மந்திரம் ஜெபித்து வெண்ணீரு தானுமிட்டு
ரஞ்சித சிங்கத்திருள ராஜேந்திர னப்போது

போஜனங்கள் செய்து புகழ் சிம்மாசனத்திருந்து
ராஜனும் ஏலம்கிராம்பு ரம்ய தாம்பூலமிட்டு

ஈட்டி சமுதாடு இகல் ஜெயிக்கும் வல்லயமும்
தாட்டிகன் வெடியெடுத்து சாமிசுக்குமாந் தடியும்

வீச்சருவாள் வங்கி வேணி உள்ளாயுதமும்
பாச்சல் வளதாடி பகை ஜெயிக்கும் ஆயுதங்கள்

கையில் எடுத்து கனவேட்டை யாடிடவே
வையகம் புகழும் வல்லப மிராணுவமும்

கச்சை அரையிலிட்டு கையிலருவா ளேந்தி
மெச்சும் புகழ்பெற்ற வீரபத்ரசாமியுமே

இன்னும் படைத்தலைவர் இயல்பாகவேகூடி
மன்னவனைக்கூட்டி வழிநடக்கலுற்றார்கள்

சங்கரன்கோவிலுக்கு தானடக்கும் பாதைவிட்டு
இங்கிதமாதா கோவி லிதனைவிட்டு மேல்நடக்க

வால்ஙகரிக்குரிவி வலமிருந் திடம்பாய
காலாள்கள் எல்லோரும் கருத்துடனே தானடக்க

திருவனந்த லூரைவிட்டுத் திரமாகவே நடக்க
கருவுருகாரண்டம் கையில்வலம் பாய்ந்ததுவே

இளந்தோப்பதைக்கடந்து இன்பசந்தோஷமுடன்
வளந்தோப்புக் கிருஷ்ணப்பேரி வந்து நடக்கையிலே

செந்தலைக்கெருடன் வந்து இடம்பாய
சுந்தர சிங்கத்திருள சுவாமியுமே தான்பார்த்து

இராணுவங்களேநமக்கு நல்ல சகுனமது
தோணுதந்த வேட்டையதைத் தொடுத்து முடிப்போமே

என்றுரைத்த ராணுவமும் இன்பவத்திராப்பேரி
நன்றுகுளக்கரையில் நாடும்காலாடிதனை

கண்டுமிகக்கொண்டாடி காவலவனப்போது
மண்டுபள்ளர் காடுவிட்டு மகிழுமாந்தோப்புதனில்

விடாயதனைத் தீர்த்து வேந்தனுமே யப்போது
தடாகம் வளர் செட்டிமடம் தன்னில் மிகயிருந்து

கருவாட்டுப்பாறைதனில் கைகுவித்துக்காவலவன்
தருகாட்டுத்தலைமலையான் தண்மலைவாழ் ராக்காசி

பாதம்பணிந்து பண்பாய்த் தேங்காயுடைத்து
சீதளசிங்கத்திருளன் ஜெயவெடியைத் தானெடுத்து

அய்யனர் கோவிலுக்கு அருமையுடனே கடந்து
வையகத்தோர் போற்றும் வரைவழியே தானேக

வழிதனிலே ஓர்மானை வல்லவனும்கண்டுமிகக்
களிப்படைந்து வேட்டைவெடி கையிலே தானெடுத்து

ஓட்டமாயோடி உத்துங்கசாமியுமே
தாஷ்டிகமாய்ப் பின்தொடர்ந்துதனியே தொடுக்கையிலே

கள்ளக்குழி கடந்து கருத்ததிருச் சேர்மலையில்
துள்ளிவிள மானை சுட்டாரே சூரனுமே.

கன்னிமார் கோவில் காட்டினிலே ஓர்காடி
மன்னவனும் சுட்டு மலைமீதில் தானடந்தார்

கம்பத்துப் பெருமாள் காட்டினிலே ஓர் கடுவாய்
தப்பித்துப்போகத் தான் சுட்டார் ஓர் தோட்டாவால்

கந்தமலர்த் தொடையான் கானகத்தில் வந்திடவே
சுந்தரஞ்சேர் மன்னன் தொலைதூரம் யேகிடவே

பூலாமலையோரம் பூமானும் தேடயிலே
மேலாக சல்லிமுத்தன் மேட்டினிலே ஓர் யானை

கண்டு குண்டால்சுட்டு கனயோக வீரனுமே
துண்டுபட்டு வெள்ளிமலை துலைதூரம் போகையிலே

யானைமல்ல னென்று பெயர் அடையும் கடுவாயை
கானகத்தில் கண்டு கைவெடியால் சுட்டனனே

குஞ்சரத்தின் வேட்டை கொற்றவனும் கொண்டாடி
மஞ்சரிமலர்ந்த வெள்ளிமால் வரையை விட்டிரங்கி

அந்த இடத்தை விட்டு அடிவாரத்தின் வழியாய்
சந்தனக்காவதனிற் தான்விடாய் தீர்க்கலுற்றார்

விண்ணகத்த ரம்பைநிகர் விரிகடல் மகளினுயர்
மண்ணிலுரை யெழுபருவம் மங்கைய ரணிமணியாம்

கண்ணினுக் கடங்கா கதிர்வனப்புத் தானடைந்து
வண்ணம் பெருகும் வாழுயிரின் பொற்பாவை

மங்குல் தனிற்பெருகி மாவிடத்தினும் கருகி
தங்கும் இதளிற் றிரண்டு சைவலத்தினும் தளிர்த்து

கொங்குயிர்க் குளைந்து நறுங்கோதையர்க்குவார்ந்தொழுகி
மங்கைகொண்டை மாயிளைஞர் மதிமருட்டும் நேர்மையுற்
றாள்

தடித்து மிகப்படர்ந்து தளதளப்புத்தான் கொடுத்து
விடுத்துகச்சைத் தானறுத்து விம்மியே தான்புடைத்து

தும்பி கொம்பு பம்பரமும் தூயசிமிள் செப்புடனே
கும்பகுடம் ராஜகனி கொங்கைமலர் செண்டுடையாள்

மாதர்கள் தங்களொடு மாமலரைக் கொய்யவென்று
சீதளபூங்கா வனத்தில் சிறப்புடனே வந்தாளே

மங்கையர்கள் பூங்கா வனத்தினிலே பூவெடுக்க
அங்கங்கே நின்றலங்கி அவ்வனத்தில் தான்மறைய

கண்ணுக்குகந்த களிப்புமலர் தானெடுக்க
பெண்ணுக்குப் பெண்ணாசை கொள்ளவந்த பேதையரும்

அன்புவிடக் கண்ணா ளகன்றார்கள் என்னைவிட்டு
கும்பிட்டேன் கிள்ளைகளே கொய்துமலர் தாரீரோ

பூங்காவனத்தே பொதிந்து மலர்ச்சொரியும்
பாங்காய் மரங்களையே பரிக்குமலர் கேட்கலுற்றாள்

புன்னைமரம் பன்னீரே பூங்காவின் சோலைகளே
என்னிதயம் பொங்க இன்பமலர் தாரீரோ

விண்ணூர்ந்த கோங்கு விரிந்தமலர் குங்குமமே
அண்ணூர்ந்த செண்பகமே அருமைமலர்த் தாரீரோ

காவிமலரிருக்க கஞ்சமல ரஞ்சிருக்கத்
தாவிப்பவளக் கொடியாள் தண்மலரைத் தானெடுத்தாள்

பச்சைவர்ணக் கிள்ளைகளே பக்தியுட னுங்களை நான்
மெச்சியே கும்பிட்டேன் மென்மலரைத் தாரீரோ

கோகிலங்கா ளுங்களையே கும்பிட்டேன் எந்தனுக்கு
ஆகுமலர் பறித்து அருமையுடன் தாரீரோ

நான்கணவாய் புல்லுகளே ஞானம்பாடிக்குருவி
பூங்காவனத்திலுறும் புகழ்மலரைத் தாரீரோ

சந்தணக்காவில் சார்ந்திருக்கும் நந்தவனம்
சுந்தரஞ்சேர் மாது துலங்கி மலர்க் கொய்நிடவே

மான்வேட்டை யாடவந்த மன்னனுமே அப்போது
தான்பேதையைக் கண்டு தனியாகத் தானிருந்தார்

நின்று யோசித்து நீதிதவறு வேந்தன்
அன்றுமலர்க் கொய்த அதிசயத்தைத் தான்பார்த்து

இந்தவனந்தனிலே இப்படியானதொரு
கந்தமலரொத்த கன்னிகையை நான் கண்டதில்லை

வனசமலர் மாதோ மாவானத்துறை மாதோ
கனகமலர் மாதோ கண்டறிய வேணுமென்று

பக்கத்திலே நெருங்கிப் பாவையரைப் பார்க்கையிலே
இக்கு ரசத்தேன் மொழியாள் இவ்வுலக மென்றறிந்து

கிட்டிமிக நெருங்கி கேகயம்போற் சாயலையும்
மட்டுக்கடங்கா வனப்பை மிகநோக்கி

பூவெடுத்துநின்ற பூவையரும் பூமானை
நாவெடுத்துப்பேசா நயனத்தால் கண்டறிந்தாள்

இந்திரனே சந்திரனே இவ்வுலக மானிடனே
கந்தமலர்க் கொய்யவந்த கானகத்தில் வந்தனனே

என்று மன தாருய்ந்து எண்ணியே தானிருக்க
அன்றுமன்னன் பேசிடவே அரசியரும் அச்சமுற்றாள்

அச்சமுற்ற பெண்ணும் அரசனையே தான்பார்த்து
இச்சையுடன் ஓர்வார்த்தை யியம்பாதிருந்தனளே

குஞ்சரமே ரஞ்சிதமே கோகிலமே வஞ்சியரே
செஞ்சொல் மதுரிதமே செல்வமே வாய்திறந்து

மானே என்கண்ணே மயிலே குயிலே செந்தேனே
திரவியமே செல்வமே வாய்திறந்து

இன்பரசக்கண்ணே இனிய ஒருவசனம்
அன்புடனுரைப்பாயே அமுர்தநிகர் பெண்ணரசே

கலைக்கோட்டு மாதனத்லைதக் காட்டியே காமனையே
நிலைக்கவொட்டா செய்திடவும் நீமனது வையாயோ

வாவென்றழைத்து மதனகாமக் கணையை
போவென்றுரைக்க பூவையரே ஆகாதோ

உந்தன் வதனத்துக்கோருவமைசொல்ல வேணுமென்றூர்
சந்திரனுக் கோர்மருவு சமைந்திருக்கு தென்செய்வேன்

கண்ணுக்குவமையென கருங்குவளை சொல்வோமென்றால்
நண்ணும் அதன்வடிவு நாடாதொருக்காலும்

நாசிக்குவமை நன்குவளைச் சொல்வோமென்றால்
யோசிக்கும் வேளை உதவாத தன்சாயல்

கோவைக் கனிக்கு நிகர் கோதையே நின்னதாம்
பாவனைகள் சொல்ல பற்றா தொருக்காலும்

முறுவலுக்கு நிகராக முத்துகளைச் சொல்வோ மென்றால்
பருவாதி மாதே பாவனையும் காணாதே

கந்தரத்தினுக்கு அரி கையில் வைத்தவாரணமே
சுந்தரியே சொல்ல சுமுகமது தோன்றவில்லை

உந்தன் றனத்துக்குவமை சொல்ல வேண்டுமென்றால்
தந்தச்சிமிள் பம்பரமும் சமைத்துக் கடைந்ததுவே

உந்திச்சுளிக்கு நிகர் ஒப்புவமை சொல்லவென்றால்
பந்துதனமாதே பரவு நீர்ச்சுழியாமோ

துடைதனக்குரம்பை நேர் சொல்லினல் ஒவ்வாது
மடல்பிரிந்திருக்குமது மங்கையரே யிங்கிதமே

கணைக்கால் தனக்குவிரால் காட்டியேசொல்வோமென்றால்
இணைக்காது யேந்திழையே இன்பரச சுந்தரியே

பாதம் தனக்குநிகர் பங்கயத்தைச் சொல்வோமென்றால்
மாதரசே கந்தாத்தில் மலர்முள் ளிருக்குமன்றோ

சுந்தரி சவுந்தரியே சுகமாக எந்தனிடம்
வந்து அணைந்தால் வரம்பெருவாய் இவ்வேளை

மான்வேட்டை யாட வந்தேனே யௌவனப்பெண்
மானே உனைப்பிடிக்க வாய்த்ததே யெந்தனுக்கு

என்று மொழியலுற்றார் இன்பமுற்ற ராஜேந்திரன்
அன்றுமலர் கொய்ய வந்த அணங்கரசுந் தானிணங்க

கள்ளக்கபடு செய்தால் காவலவனை யுரைப்போம்
உள்ளபடி நீசெய்தால் யார்க்குரைப்போம் உத்தமனே

ஊரேது பேரேது உத்தமரே நித்தியசுகா
தாராளமாகச் சாற்றுவீர் எந்தனுக்கு

இன்பமுடநீயும் இணங்கி எனைச்சேர்ந்தால்
முன்புவிஜயநகர் முடிமன்னர் தானுரைத்தார்

சிங்கத்திருளாண்டி செப்பு வாரென்பெயரை
பங்கயப்பெண் மாதே பகர்ந்தே நானுந்தனிடம்

கன்னியழியாத காந்தையை நீசேர்ந்தணைந்தால்
பின்னமாய் வார்த்தையது பிறந்திடுமே சீமானே
சின்னம் சிறியாளும் செப்புகின்றேன் சுந்தரனே
உன்னியே பார்க்கையிலே ஒளிவாகத்தோன்றிடுமே
கல்யாணஞ்செய்து கலர்ந்து அணைந்தாக்கால்
நலிவான வார்த்தை ஒன்று நாட்டினில் பிறந்திடுமே
என்றுமொழியலுற்றாள் இன்பரச மங்கையரும்
நன்றுயெனச் சம்மதித்து ராஜேந்திரனப்போது
மல்லிகைமுல்லைக் கொடியும் மலர்ப்பந்தலாகவுமே
நல்லிலையின் ரம்பை நாலுதிக்கும் நின்றிடவே
உல்லாசவண்டுகளும் உவப்புடனிந்து ராகம் பாடிடவே
சல்லாபசிங்கமெனும் சாமிதுரைதனக்கே
கோகிலங்கள் கூடிகுலாவியே பாடிடவே
யூகியர்கள் போலே யுகந்தாடும் கிள்ளைகளும்
நாகசுரமேளம் நாலுதிக்கும் பச்சிகளும்
கேகையங்கள் தோகைவிரித் தாகமுடன் ஆடியதே
பாகுரசமொழிகள் பட்சிகளும் பாடிடவே
வாகுபுயராஜனுக்கு வாழிமிகப் பாடினதே
காந்தர்வ விவாகம் கன்னிகையைத் தான்முடித்து
வேந்தர்பணி சிங்கதுரை விளையாடிக் கூடினரே
அச்சுதனைச் சேர்ந்த சுகலக்ஷிமியைப் போலமர்ந்து
கெச்சிதமாய்ச் சிங்கதுரை கோதையுடன் கூடினரே
கந்தனோ டுகந்துவள்ளி கலர்ந்து விளையாடுதல்போல்
சுந்தரசிங்கத் திருளன் சுமுகியுடன் கூடியதே
வெள்ளைக் கிளிகள் விளாம்பழத்தைக் கொண்டுவந்து
தள்ளிவிளையாட தந்திரமாய்த் தந்ததுவே

176452

மாங்காய் உருட்டி மங்கைமண வாளனுமே
தேங்காயுருட்டி செல்வர்களு மாடுதற்கு
பாங்குமிக வானரங்கள் பக்குவமாய்க் காய்கனிகள்
தாங்கா தென்னுங் குரும்பைத்தான் கொண்டு வந்ததுவே
வர்னக்கிளிகள் மன்னவர்க்கு பூவெடுத்து
சொர்னமழை போலே தூவிவிளை யாடியதே
நாங்கணவாய் புல்லுகளும் ருகம்பாடிக் குருவி
ரீங்கார வண்டுகளும் இன்பமுடன் பாடியதே

கூடிக்குலாவி குபேரசிக ராஜனுமே
வேடிக்கையாக வெடியெடுத்து போகையிலே

எந்தனுக்கு இன்பசுகம் தந்தணைந்த என்கோவே
தந்திரமாய் விட்டகல தயவோ சொல் மன்னவரே

என்றுமிகவேயுரைக்கும் இன்பமுற்ற மங்கையர்க்கு
அன்றரச னங்கையற்கு அன்புமிக வேயுரைப்பார்
கூடவந்த கும்புகளை கூட்ட.வனந் தோறும்
தேடியே காண்பதற்குச் செல்லவேணு மென்றுரைத்தார்
இப்படியுரைப்பதனை இன்பமுற்ற நற்பதத்தாள்
எப்படி சகிப்பதினி என்றுரைத்தாள் கற்பரசி
வேல்விழியாள் மங்கை வேந்தா எனைப்பிரிந்தால்
கால்வழியாய் வந்து கண்டுபிடிப்பேனே
பேரூரு எந்தனுக்குப் பிரபலமாய் சொல்லிவிட்டால்
தாராளமாகச் சாருவே னுந்தனைநான்

அரசநகராளும் அய்யன் சிங்கத்திருளன்
துரைராஜ னென்றே சொல்லிடுவா ரென்பெயரை

மங்கையிட த்தில் மகிழ்ந்து மொழிகொடுத்து
இங்கிதத் தோட்டாவெடியை இன்பமுடன் தானெடுத்து

நடந்தார் வனத்தை விட்டு ராஜேந்திரனப்போது
படர்ந்தகன்னிமார் கோவில் பக்கத்தில் ராணுவங்கள்
கண்டார் கருத்தினிலே கருணையொடு ஆனந்தம்
கொண்டார் சிங்கத்திருளன் குற்றமற்ற பூபாலன்
சேர்மலையைச் சுற்றி சிறந்த வனந்தனிலே
கார்முகிலை யொத்த கரடி யொன்று கண்டார்கள்
கூர்வேலைக் கொண்டு குத்தினார் வீரபத்திரன்
தார்மாலையுற்ற சாமியும் சந்தோஷமுற்றார்
கருப்பணன் கைவேலாலே கனத்த கடுவாய் ஒன்று
மறித்திடவே வெட்டி மகுமையுற்றார் அப்போது
வைரவர்கள் கூடி வளைந்துமே பன்றிதனை
தைரியமாக் கொன்று சாமியிடம் தானுரைத்தார்
நடந்தார் வனத்தைவிட்டு ராஜேந்திரனப்போது
தொடர்ந்தார் கெண்டிப்பாரை சுகமாற்றில் தானமர்ந்து
சமைத்தார்கள் அன்னம் சகல சட்சாதியுடன்
அமைத்தார்கள் போஜனங்கள் அன்புமிகப் பெருக
வேப்பங்குளத்தார்கள் விரிந்த திருக் கானத்தில்
சாப்பிட்டுக் கொண்டிருந்த சார்வேங்கை சுட்டார்கள்
அய்யனார் கோவில்வனம் ஆராய்ந்து பார்க்கையிலே
செய்யதிரு வேடுவர்கள் சேர்ந்துவந்து தான்பணிந்து
மெய்யாஞ் சிங்கத்திருளா மேன்மையுற்ற யெங்கள்துரை
அய்யா ஒருகரடி ஆணவங்கள் தான்மிகுந்து
இருக்கின்ற திவ்வனத்தில் யெங்களுக்குச் சீவனங்கள்
வெறுத்ததே யென்செய்வோம் வேந்தனே இப்போது
என்றுமிக வேடுவர்கள் யியல்புடனே சொன்னளவில்
அன்று காடிதனை அடிபார்த்து தேடுகையில்

நவ்வலடி தண்டோரம் ராணுவங்கள் தான்பார்த்து
செவ்வையாய் வேட்டை ஜெயிக்கக் கிடைத்ததென்று

தேடிவரும் போது திரமாகப்புத்துரிய
நாடியது கைவேலால் ராஜேந்திரன் குத்தினனே

தாதர்பெருமாள் கோவில் தன்னில் விடாய்தீர்த்து
சீதரசிங்கத்திருளன் திரண்டாராணுவங்களொடு

முடங்கியாற்றில்வந்து முகூர்த்தமுடன் தான்சேர்ந்து
படர்கைலாசந் தோப்பில் பாங்காய்க் கனியருந்தி

அப்பாள்ராஜா வூரணியி லடைவாகத் தானமர்ந்து
செப்புதற் கரிதான ஜெயங்கள்மிகத் தானடைந்து

கோவிலுக்குத் தான்வந்து குற்றமற்ற ராஜேந்திரன்
காவலர்கள் கொண்டாட கன சிம்மாசனத்திருந்து

எல்லோரும் தான்பணிந்து எடுத்தார்கள் ஆலாத்தி
வல்லவ சிங்கத்திருளன் மணி மண்டபத்திருந்து

மேளமுதல் வாத்தியங்கள் மேன்மையுற்ற சங்கீதம்
தாளசுர நாகமுமே தானடந்து பூசையுற்றார்

இப்படி யிருக்க எஜமானைத் தான்பிரிந்த
செப்புதனமாது திகைத்துமே தான்புலம்பி

கூந்தலே உந்தனிடம் கூடிக் குலாவியதோர்
வேந்தனெங்கே சென்றவழி விபாமுடன் காணீரோ

இந்துநுதல் கண்ணே யெபபோது உந்தனிடம்
சந்தோஷமா யிருந்த சாமியை நீர் காணீரோ

முகமே வுனதோடு முத்தமிட்டு தானிருந்த
ஜெகராஜர் போற்றும் செல்வனை நீர் காணீரோ

அதாமேயுந்தன் அமுர்த ரசம் பருகி
விதரணமாய்க் கொண்டதொரு வேந்தனை நீர் காணீரோ

நகையே வுனதோடு நன்மனதாய்க் கொண்டதொரு
பகைவர்களை வென்ற பாக்கியனைக் காணீரோ

நாக்கே உனதோடு நன்மொழிகளைப் பகர்ந்து
ஆக்கமுடன் சேர்க்கைசெய்த அரசனை நீர்காணீரோ

தனமே உனைப்பிடித்து தாகமது தீர்த்த
கனயோக வீரரெனும் காவலனைக் காணீரோ

இடையே வுனையடுத்து இன்பக்கலவி செய்த
குடையில் கிறந்த குமணனை நீர்காணீரோ

பணம்பறிக்கும் பாத்தையர்பால் பர்த்தாவை செல்லவிட்டு
சணம் பிரியா மங்கைமனம் தணல்போல் கொதிக்கி தென்ருள்

கலைகள் மிகப்பாடி காவலவன் கேட்டையா
புலவர்மனம் போலே புந்தி கொதிக்கு தென்ருள்

வார்ணக்கொடியோன் கை வாளாயுதம் வழியாய்
வாரணமே யீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்

சிந்தை தடுமாறி சிதரியே மெய்நடுங்கி
பந்து தனமாது பதைக்கின்ற வேளையிலே

நாகமலைகடந்து நன்சந்தணக் காவில்
தோகைமலைக் குறத்தி தோன்றி குறி சொல்வதற்கு

வந்தாள் வழிநாடி வான்மலையைத் தான் கடந்து
சிந்துரமலை கடந்து சிறப்புடனே வந்தாளே

கந்தமலர் வனத்தே கன்னிகையைத் தானடைந்து
சுந்தரி சவுந்தரியின் சோர்வுதனைத் தானறிந்து

இந்துமுகக் குறத்தி யின்பரச மங்கையரே
சிந்தையில் நினைந்தவகை சிறப்புடனே சொல்வேனென்ருள்

எந்தவூர் எவ்விடம் நீ யெங்கிருந்து இங்குவந்தாய்
சிந்தையுகந்து நங்கை சிரத்தையுடன் கேட்கலுற்ருள்

தோகைமலைக் குறத்தி சொல்லிடுவா ரென் பெயரை
வாகுகுறி சொல்வதற்கு வந்தேனு னிவ்வழியே

இந்தவகை யுரைக்க யிறையவனைத் தான்பிரிந்த
சுந்தரியும் தோகையரைத் தோன்றி குறி சொல்லென்றாள்

நல்லதென்று சொல்லி நங்கை தேவதை வருந்தி
வல்லகை சூரனைரவென்ற ஆறுமுக நாதனேவா

சாமி ஒழியாதே சரசுபதி பொய்யாதே
நேமித்த கன்னிகுறி நிஜமாகச்சொல்லிடுவாய்

ஆகுவாகனமேறும் ஐங்கரனே முன்னடவாய்
யோக புயகரனே யொப்புதலாய்ச் செப்பிடுவாய்

கோட்டமலை யாண்டி கொத்தளத்து வீறியனே
மேட்டுமலை யோரம் வீற்றிருக்கும் துர்க்கையே நீ

மலையாள பகவதியே வரவேணு மென்னருகே
கலையாமலென் குறியை கட்டி நீசொல்லிடுவாய்

காவுகளிலே யிருக்கும் கருப்பையா யெந்தனுக்கு
மாவிரிசி கன்னிகளே வந்துகுறி சொல்லிடுவீர்

வஞ்சிக்கொடியே யுன் மனதில் வைத்த காரணத்தை
விஞ்சைமந்திரம் ஜெபித்து விளம்புகிறேன் கேளம்மா

அரசநகராளும் அய்பன் சிங்கத்திருளன்
துரை சாரங்கமொன்று தாத்தியே வந்ததுண்டு

குண்டுனால் சுட்டு கொன்று மானை வென்றதுண்டு
தண்டுளபச்சூழ் வனத்தில் தனியாக வந்ததுண்டு

உந்தனைக்கண்டு வுகந்து மையல் கொண்டு
கந்தர் விவாகம் களிப்புடனே செய்ததுண்டு

உண்டுமா இல்லையா வுத்தமியே வைத்தகுறி
கண்டுவர இல்லையென்றால் களித்துவிடு இக்குறியை

வைத்தகுறி சொல்லிவிட்டாய் வனிதையே யிப்போது
முத்துகுறி கையிலெடு மோகனரைச் சொல்லிவிடு

சங்கரசதாசிவனே சம்போமகாதேவா
பொங்கரவணிந்த புராந்தகனே யிவ்வேளை

மங்கை மனதில் வைத்த வாள்குறியைத் தப்பாமல்
துங்க ரணவீரா சொல்லிடுவா இவ்வேளை

சொந்தமுடனே கலந்து தோகையே யுனைப்பிரிந்து
வந்தவழியே நிறைந்து மன்னவருஞ் ராணுவமாய்

வல்லவரும் மந்திரியும் வாள்நாட்டுக் கேகியிரு
தொல்லுலகோர் போற்ற சுகமாக வாழ்ந்தனரே

வறைக்குறத்தி மங்கையவள் மனதிலே வந்ததெல்லாம்
பிறைமுகத்தாள் தனக்குறைத்து பிரியமுட னேகினளே

ஏகியே மங்கையவள் யெஜமானைத் தான் தேடி
மோக வலைகொண்டு முக்கியமாய்த் தானிருக்க

பூங்கா வனத்தே பூவெடுத்த மங்கையர்கள்
பாங்காகவே சேர்ந்து பாவையிடம் வந்தனரே

காவிமல ரெண்டும் கஞ்சமல ராச்சே
பாவையே நின்முகமோர் பாவனையாய்த் தோணுதம்மா

உடை குலைந்திருக்கும் வகை வூக்கமற்றிருக்கும் வகை
உடமையிட மாருவகை உண்மையுடன் சொல்லிடுவீர்

காவுதனிலே நடந்த காரணத்தை யெங்களிடம்
மேவுதுரைஉன்னை மெல்லியரே சொல்லிடுவீர்

வருத்தமுற்ற மங்கையரும் வாள்தோளியர் களிடம்
மறுத் துறையாதபடி வன்மொழிகள் தானுறைக்க

கோதையரே உங்களைநான் கோவனத்தில் தான்பிரிந்து
கோதுகிளல் மலரைக் கொய்திருக்கும் போதினிலே

கண்ணை மிரட்டினதால் காவனத்தில் தானுரங்க
எண்ணத்திற் சொற்பனங்கள் என்னென்னமோகண்டேன்

இந்தமொழி கேட்டு யின்பமுற்ற மங்கையரும்
நந்தவனத்தைவிட்டு நகர் தனக்கு ஏகினரே

கிஞ்சுமொழி மாதுகிளர்தோழியர் களுடன்
மஞ்சரிலையக் கொய்து மாளிகையில் தான்புகுந்தார்

இப்படியாக இருக்கின்ற நாட்களிலே
செப்புதனங்கள் சிகப்பேரி தான்கருக்க

பெற்றதாய் தன்மனதில் பேதகமாய்த் தோன்றிடவே
உற்றவகை எந்தனிடம் உரைமகளே என்றுரைத்தாள்

மலர்கொய்து வந்தேன் மாதாவே எந்தனிடம்
பலர் வார்த்தைகேட்டு பகைக்கு மொழிகேளாதே

என்றுமொழியலுற்ற யேந்திழையின் மாதாவும்
நன்றாக நின்கூந்தல் நான்முடித்து வைத்தேனே

சீவிமுடித்த குருள் சிதறி யிருப்பதென்ன
காவுகளில் பூவெடுத்த கன்னிகையே சொல்லிடுவாய்

மாதர்கள் தன்னோடு மாமலர்கள் கொய்தேனன்
வாதுமுள்ளு கொம்பிளுத்து மலர்க்குரு ளவிழ்ந்துதம்மா

இந்துநுதலில் திலகம் இன்பமுடனெக்கணிந்தேன்
சுந்தரஞ்சேர் மாதே துடைத்தவகை சொல்லிடுவாய்

தோழியர்களோடு தொடுத்துவனம் செல்கையிலே
ஏழுபரியான் சுடரால் யென்முகமும் வேர்த்துதம்மா

கண்கள் ரெண்டொனக்குக் காவிமலரொற்றிருக்க
தண்ணிதழ்கள்போன்ற திருதாமரையையொத்ததென்ன

வேதமுரைசாஸ்திரங்கள் விளக்கொளியில் நான்படித்தேன்
ஆதலால் யென்னயனம் அம்போருகமாச்சே

கோவை அதரமதில் குறிகுணங்கள் தோணுதம்மா
பாவையே யெந்தனிடம் பண்பாகத் தானுரைப்பாய்

சந்தேகவார்த்தைதனை தாயேநீ கேட்கலுற்றாய்
சுந்தரஞ்சேர் கிள்ளைதனை தொட்டுமுத்த மிட்டேனே

கும்பதனங்களிலே குறிகுணங்கள் தோணுதம்மா
அம்புவிடக் கண்ணாளே அந்தரங்க மாயுரைப்பாய்

நவரத்தினமாலை நானணிந்தே னித்நிரையில்
துவண்டு பிரண்டளுத்தி தோணுதம்மா யிக்குறிகள்

ஆலிலைபோ லுந்தனுக்கு அடிவயி றிருந்ததம்மா
மூலகணநாதனைப்போல் முன்னாகத்தோணுதடி

பலகார பக்ஷணங்கள் பதிபூரணமாக வுண்டேன்
நலமாக யென்மொழியை நம்பிடுவாயன்னையேநீ

தாய்க்கொளித்த சூலுண்டோ தரணியிலேதானுரைப்பார்
பேய்பிடித்தவள் போலே பிதற்றுதே யென்மகளே

பூங்காவிச் சோலைதனில் பொலிந்து மலர்கொய்தேன்
பாங்காக யென்தாயே பண்பாயுரைப்பதைக்கேள்

மானைத்தொடுத்துவந்த மா சிங்கபூபாலன்
தானென்னைத் தொடுத்து சார்ந்தாரே யென் தாயே

இந்தவகை யெந்தனிடம் இதவாய் மொழிந்திருந்தால்
சந்ததமும் மன்னனுனை சார்ந்திருக்கச் செய்வேனே

மானேமரகதமே மங்களகல் யாணிமுத்தே
தேனேரசமொழியே செல்வமேகண்மணியே

அன்னநடைமின்னே ஆனந்தபொற்குயிலே
என்னதவம் செய்தேனோ ஈன்றெடுத்தேனுந்தனைநான்

தேவர் தருக் காமதேனுவுக்குமொப்பாக
மேவுசிங்க பூபாலன் மேல்கொடுக்கும் செங்கரத்தான்

அயன்வாகனத்தோ ரன்புநடனபிடி
கயநடையும் காட்டும் கன்னிகையே கண்மயிலே

கூடிக்கலந்ததினால் குபேரதிசை யுந்தனுக்கு
கூடிவருமென்று குறத்தி குறிகூறினளே

அக்குறி யுரைத்ததனை அந்தரங்கமாக வைத்து
இக்குரச தேன்மொழி நீ யிணங்கினதால் நிச்சயித்தேன்

காமர் கயல் புரள காவிமுகம் நெகிள
தாமரையின் செந்தேன் தலையின்வழி தானொளிகி

சென்னல் விளையும் திரு ராஜ பாளையத்தில்
மன்னன் சிங்கத்திருளன் மகிபனை நீ சேர்ந்துசுக

புத்திரரை பெற்றெடுத்து புகழோங்கி வாழ்ந்திருந்து
நித்திய சுகானந்தம் நீபெருவா யென்மகளே

மாதமும்மாரி மகிழுடனே தான் பொழிந்து
சீதய சென்னல்விளையும் திருராஜபாளையத்தில்

நீதிஅரசாக்ஷி நீநிலத்தோர் கொண்டாட
நாதனென வந்துதித்த நல்ல சிங்கராஜேந்திரன்

கோவில் திருப்பணிகள் குறையறவே செய்து வைத்த
நாவலர்கள் போற்றும் நலம் யெரல் கொண்டல் குலம்

பெருமாள் ராஜேந்திர னெனும் பிரபல தர்மகர்த்தாவாய்
பெருமையெனும் பேர்தரித்து பெம்மானாய் வந்துதித்தோன்

பில்லலக்கோட்டைதனில் பிரபலமாய்த் தான்வாழும்
மல்லிகைமுல்லைத்தொடைபோன் வரதசிவபக்தியுற்றோன்

பாண்டிவேளாளர் குலம் பழனி வீரபத்திரபிள்ளை
வேண்டினவர்க் கன்னவஸ்திரம் வித விதமாய்த் தான்கொடுப்போன்

இருவருமாய்க்கூடி இக்கோவில் கட்டிவைத்த
பெருமைதனையுற்ற பிரபல்யத்தை என்னசொல்வேன்

பூசித்து வந்தோர்கள் பிரபலமாய்த் தான்வாழ்ந்து
காசினி யோர்போற்ற கனமாக வாழ்பவரே
சந்திரரும் சூரியரும் சாரணரும் இந்திரரும்
மந்திரமும் மால்வரையும் மாராகு கேதுகளும்
விந்தைவளர்க்கடலும் வேதமுறை சாஸ்திரமும்
சிந்தாத தன்வரையும் செல்வவளர் வாழியதே
வாழிமிகவாழி வளர்கோவிலும் வாழி
ஊழிவினை தீர்க்கும் உத்தம கணேசனுமே
கோவில்மிகவாழி கொத்தளத்து வீரியனும்
மாயபேச்சி ராக்கு சத்திமகுலமை கருப்பணனும்
மாலையின்னும் தேவதைகள் வளர் நந்தவனமுமே
வேலைநிகர் கூபமது விறிவாக வாழியதே
வாழிமிகவாழி அரசர்களும் தான்வாழி
தாளிணை மிகப்பணிந்து சதாபூசை செய்பவர்கள்
நீடூளிகாலம் நிறந்தரனைத் தியானித்து
வாடாத செல்வம் வாழ்ந்திருக்க வாழியதே
காசிப கோத்திரத்தில் கவிஞனென வந்துதித்த
தாசனனந்தராஜன் சாற்றுங் கவிதனக்கு
மங்களமா யேற்ற மால்ராஜ நகர் வாசன்
சிங்கத்திருளாண்டி செல்வ நகர் வாழியவே.

முற்றிற்று.